ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

श्रेयान् स्वधर्मो विगुणः परधर्मात् स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥ गीता ॥

ஶ்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் ।
ஸ்வதர்மே நிதநம் ஶ்ரேய: பரதர்மோ பயாவஹ: ॥ கீதா ॥

இதர ஜாதிகளுக்கோ ஆச்ரமிகளுக்கோ விதிக்கப்பட்ட தர்மத்தை நன்கு அதற்குற்ற அங்கங்களோடு அனுஷ்டிப்பதைக் காட்டிலும் தம் ஜாதி ஆச்ரமத்திற்கு விதிக்கப்பட்ட தர்மத்தை விதிப்படி ஸகல அங்கங்களுடன் அனுஷ்டிக்காமல் அற்பம் மாறுதலாக அனுஷ்டித்தாலும் அது சிரேயஸ்ஸைக் கொடுக்கக்கூடியதே. தமக்கு விதிக்கப்பட்ட தர்மத்தை அனுஷ்டித்துக்கொண்டே மரணத்தையடைவது சிரேயஸ்ஸை கொடுக்கும். பிறர் தர்மங்களை அனுஷ்டித்தால் அதினால் கஷ்டத்தை அடையவேண்டும்.

நல்ல ரூபவதியான பிறருடைய மாதாவைக் காட்டிலும் குரூபமுள்ளவளான தம் மாதா எப்படித் தமக்கு ஹிதத்தையுண்டு பண்ணுவளோ அவ்விதம் பிறருடை தர்மத்தை அனுஷ்டித்து ஜீவிப்பதைக்காட்டிலும் தனக்குற்ற தர்மத்தை அனுஷ்டித்து மரிப்பதே சிறந்ததாகும். பிறருடைய தர்மத்தைச் சிறந்ததெனக் கருதி அனுஷ்டிப்பதால் இவ்வுலகில் கெட்ட கீர்த்தியும் பரலோகத்தில் கொடிய நரகதுக்கானுபவமும் எற்படுகின்றது. ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பதால் ஜீவித்திருக்கும்வரையில் உலகில் நல்ல கீர்த்தியும், பரலோகத்தில் ஸ்வர்க்கம் முதலான சிறந்த ஸ்தானப் பிராப்தியும் எற்படுகின்றது. ஒரு யஜமானனுடைய உத்திரவுப்படி நடக்கவேண்டியஜனங்கள் அவன்சொல்லியபடி காரியங்களைநடத்தி எங்ஙனம்அதின் பயனைப் பெறுகிறார்களோ அங்ஙனம் யஜமானனான ஸ்ரீ பரமேசுவரனுடைய ஆக்ஞானுஸாரம் அவரவர்களுக்கேற்பட்ட தர்மத்தை அனுஷ்டித்தால் தான் அதற்குற்ற பயனைப் பெறலாம். மாறுதலாக மற்றொன்றை அனுஷ்டித்தால் பலனில்லாமல் போவதுமன்றி அதிக கஷ்டத்தையும் அடையவேண்டுமென்று அறிவிக்கிறார்.

சுபம் !

உபபத்திராதிபர்,

ஆர்ய தர்மம்.
பிரபவ-௵ மார்கழி-௴ உகவ

# மோக்ஷாதிகாரி நிரூபணம்.

(725-வது பக்கத்தொடர்ச்சி).

संसारान्मुच्यते जन्तुश्शिवतादात्म्यभावनात् ।
यथा दानं तपो वेदाध्ययनं चान्यकर्म वा ॥
सहस्रांशन्तु नार्हन्ति सर्वदा ध्यानकर्मणः ।

ஸம்ஸாராந்முச்யதே ஜந்துஶ்ஶிவதாதாத்ம்யபாவநாத் ।
யதா தாநம் தபோ வேதாத்யயநம் சாந்யகர்ம வா ॥
ஸஹஸ்ராம்ஶந்து நார்ஹந்தி ஸர்வதா த்யாநகர்மண: ।

எவன் தன்னை சிவஸ்வரூபமென்று தியானிக்கிருனே அவன் ஸம்ஸாரபந்தத்திலிருந்தும் விடுபடுகிறுன். தானம், தவம், வேதமோதுதல் மற்றுமுள்ள கர்மங்கள் இவையாவும் தியானமென்கிற கர்மத்தின் ஆயிரத்திலொருபங்கு கூட ஆகமாட்டா.

जातिमाश्रममङ्गानि देशं कालमथापि वा ।
आसनादीनि कर्माणि ध्यानं नापेक्षते क्वचित् ॥
गच्छन् तिष्ठंश्चरन् वापि शयानो वान्यकर्मणि ।
पादुकेनापि युक्तो वा ध्यानादेव विमुच्यते ॥
नेहाभिक्रमनाशोऽस्ति प्रत्यवायो न विद्यते ।
स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात् ॥

ஜாதிமாஶ்ரமமங்காநி தேஶம் காலமதாபி வா ।
ஆஸநாதீநி கர்மாணி த்யாநம் நாபேக்ஷதே க்வசித் ॥
கச்சந் திஷ்டம்ஶ்சரந் வாபி ஶயாநோ வாந்யகர்மணி ।
பாதுகேநாபி யுக்தோ வா த்யாநாதேவ விமுச்யதே ॥

𑌨𑍇𑌹𑌾𑌭𑌿𑌕𑍍𑌰𑌮𑌨𑌾𑌶𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌾𑌯𑍋 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌮𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑍍𑌰𑌾𑌯𑌤𑍇 𑌮𑌹𑌤𑍋 𑌭𑌯𑌾𑌤𑍍 ।

தியானமானது ஒரு ஸமயமும் ஜாதி ஆச்ரமம் அங்கங்கள் தேசம் காலம் ஆஸநம் முதலான கர்மங்களை அபேக்ஷிக்காது நடந்துகொண்டாவது நின்றுகொண்டாவது பலவிடங்களில் திரிந்துகொண்டாவது படுத்துக்கொண்டாவது வேறு கர்மாக்களைச்செய்துகொண்டாவது பூரதுகையுடன் இருந்தாவது தியானம் செய்த மாத்திரத்தில் முக்தியடைகிறான். இதற்குக் கிரமபங்கமும் தோஷமும் கிடையாது. இந்தத்தியானத்தை அற்பம் அனுஷ்டித்தாலும் பெரிய பயத்தினின்றும் ரக்ஷிக்கப்படுகிறான்.

आश्चर्ये वा भये शोके क्षुते वा मम नाम यः ।
व्याजेनापि स्मरेद्यस्तु स याति परमां गतिम् ॥

𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑍇 𑌵𑌾 𑌭𑌯𑍇 𑌶𑍋𑌕𑍇 𑌕𑍍𑌷𑍁𑌤𑍇 𑌵𑌾 𑌮𑌮 𑌨𑌾𑌮 𑌯𑌃 ।
𑌵𑍍𑌯𑌾𑌜𑍇𑌨𑌾𑌪𑌿 𑌸𑍍𑌮𑌰𑍇𑌦𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌸 𑌯𑌾𑌤𑌿 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ॥

ஆச்சர்யம் நேர்ந்தகாலத்திலாவது பயம் நேரும்பொழுதாவது தும்மல் துக்கம் இவைகள் உண்டாகும்காலத்திலாவது வேறுவியாஜத்தாலாவது எவன் என்னுடைய பெயரை ஸ்மரிக்கின்றானோ அவன் சிறந்த பதவியையடைகிறான்.

महापापैरपि स्पृष्टो देहान्ते यस्तु मां स्पृशेत् ।
पञ्चाक्षरीं वोच्चरति स मुक्तो नात्र संशयः ॥

𑌮𑌹𑌾𑌪𑌾𑌪𑍈𑌰𑌪𑌿 𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑍋 𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌤𑍇 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌮𑌾𑌂 𑌸𑍍𑌪𑍃𑌶𑍇𑌤𑍍
𑌪𑌞𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑍀𑌂 𑌵𑍋𑌚𑍍𑌚𑌰𑌤𑌿 𑌸 𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ [𑌶𑍌𑌨।

மஹாபாபங்களைச்செய்திருந்தாலும் எவனொருவன் சரீர வியோக ஸமயத்தில் என்னை ஸ்மரிக்கிறானோ பஞ்சாக்ஷரமென்கிற மஹா மந்திரத்தை ஜபிக்கிறானோ அவன் முக்தனாகிறான். இதில் சந்தேகமில்லை.

विश्वं शिवमयं यस्तु पश्यत्यात्मानमात्मना ।
तस्य क्षेत्रेषु तीर्थेषु किं कार्यं वान्यकर्मसु ॥

𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌮𑌯𑌂 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌤𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌤𑍀𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌕𑌿𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑌾𑌨𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌸𑍁

எவன் ஸகல ஜகத்தையும் தன்னையும் சிவஸ்வரூபமாக அறிகிறானோ அவனுக்குப் புண்யக்ஷேத்திரம், புண்யதீர்த்தம் மற்றுமுள்ள கர்மாக்கள் இவைகளால் பிரயோஜனமில்லை.

अन्यानि शैवकर्माणि करोतु न करोतु वा ।
शिवनाम जपेद्यस्तु सर्वदा मुच्यते तु सः ॥
अन्तकाले तु रुद्राक्षान् विभूतिं धारयेत्तु यः ।
सर्वधा नो पसर्पन्ति तं जनं यमकिंकराः ॥

அந்யாநி ஶைவகர்மாணி கரோது ந கரோது வா ।
ஶிவநாம ஜபேத்யஸ்து ஸர்வதா முச்யதே து ஸ: ।
அந்தகாலே து ருத்ராக்ஷாந் விபூதிம் தாரயேத்து ய: ।
ஸர்வதா நோ பஸர்பந்தி தம் ஜநம் யமகிங்கரா: ॥

சிவஸம்மந்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கும் இதர கர்மாக்களைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் எவன் எப்பொழுதும் சிவ நாம ஜபத்தைச் செய்கிறானோ அவன் ஸம்ஸாரபந்தத்திலிருந்தும் விடுபடுகிறான்.

தன் முடிவுகாலத்தில் எவன் ருத்ராக்ஷங்களையும் விபூதியையும் தரிக்கிறானோ அவனிடம் இயமகிங்கரர்கள் வரமாட்டார்கள் நிச்சயம்.

இவ்விதம் கூறும் ஸ்ரீ பரமேசுவரரிடம் ஸ்ரீ ராமர் வினவுகின்றார்.

भगवन् पूजितः कुत्र कुत्र वा त्वं प्रसीदति ।
तद्ब्रूहि मम जिज्ञासा वर्तते महती विभो ॥

பகவந் பூஜித: குத்ர குத்ர வா த்வம் ப்ரஸீததி ।
தத்ப்ரூஹி மம ஜிஜ்ஞாஸா வர்ததே மஹதீ விபோ ॥

ஹே பகவந்! உமாநாத எந்தெந்த இடத்தில் உம்மைப்பூஜித்தால் நீர் பிரஸாதத்தை உண்டுபண்ணுவீர். எங்கும் வ்யாபகராய் விளங்கும் ஹே ஈச! இந்த விஷயத்தை நீங்கறிந்துகொள்ள வேண்டுமென்கிற ஆவல் எனக்கு அதிகமிருப்பதால் தாங்கள் தயவு செய்து கூறவேண்டும்.

ஸ்ரீ சங்கரர் மொழிகின்ற விடை.

मृदा वा गोमयेनापि भस्मना चन्दनेन वा ।
सिकताभिर्दारुणा वा पाषाणेनापि निर्मिता ॥
लोहेन वाथ रङ्गेण कांस्यकर्परपित्तलैः ।
ताम्ररौप्यसुवर्णैर्वा रत्नैर्नानाविधैरपि ॥
अथवा पारदेनैव कर्पूरेणाथवा कृता ।
प्रतिमा शिवलिंगं वा द्रव्यैरेतैः कृतन्तु यत् ॥
तत्र मां पूजयेत्तेषु फलं कोटिगुणोत्तरम् ।

ம்ருதா வா கோமயேநாபி பஸ்மநா சந்தநேந வா ।
ஸிகதாபிர்தாருணா வா பாஷாணேநாபி நிர்மிதா ॥
லோஹேந வாத ரங்கேண காம்ஸ்யகர்பரபித்தலை: ।
தாம்ரரௌப்யஸுவர்ணைர்வா ரத்நைர்நாநாவிதைரபி
அதவா பாரதேநைவ கர்பூரேணாதவா க்ருதா ।
ப்ரதிமா ஶிவலிங்கம் வா த்ரவ்யைரேதை: க்ருதந்து யத் ।
தத்ர மாம் பூஜயேத்தேஷு பலம் கோடிகுணோத்தரம் ॥

மண், கோமயம், பஸ்மம், சந்தனம், மணல், கட்டை, கருங்கல் இரும்பு, ஈயம், வெண்கலம், தகரம், பித்தளை, செம்பு வெள்ளி, தங்கம், பற்பலரத்தினங்கள் ரஸம், கற்பூரம் என்பவைகளில் எதாகிலும் ஒன்றினால் பதுமையாகவாவது சிவலிங்கமாகவாவது செய்து அதில் என்னைப் பூஜை செய்வானேயானால் கோடிமடங்கு அதிகமான பலம் ஏற்படும். (தொடரும்)

உபபத்திராதிபர்.

---

காந்தியடிகள் கூறும் விதவா மறுவிவாகத்திற்கு வங்காளப்பள்ளி ஆசாரியரின் மறுப்பும், அதற்கு காந்தியவர்கள் தமது "யங் இந்தியா" வில் கூறும் சமாதானம் சரியல்லவென்பதும்.

(735-வது பக்கத்தொடர்ச்சி)

அதிலும் காந்தியடிகளின் அபிப்பிராயத்திற்கிணங்க விதவைகளின் மறுமண விஷயமாக யாதொரு வசனமுமிருப்பதாக எமக்குத் தெரிந்தவரையில் தோன்றவில்லை, கலியில் விதவைகளுக்கு

மறுவிவாகமே கூடாதென விதித்து நிற்கும் நமது மதநூற்களுக்கு முறணாக வேதத்தின் கண் ஆதாரம் எங்கிருக்கின்றதோ தெரியவில்லை.

நிற்க எமது காந்தியடிகள் பகவத்கீதையின் கண்ணும் பால்ய விதவைகளுக்கு இடமில்லையெனக் கூறுகின்றார்கள். மோக்ஷ சாதனத்தைப் புகட்ட வெழுந்த கீதாசாஸ்திரத்தில் விதவைகளின் விஷயமாக இடமில்லையெனக் கூறுவது நியாயங்களை எடுத்துரைக்கும் சட்ட புத்தகங்களில் (Civil and Crimenal Prodcedure Codes) பூதங்களின் இயற்கையும் குணமும் (Properties of mather) கூறப்படவில்லையென்று சொல்வதுபோலன்றோ இருக்கின்றது அவ்விஷயத்தைப்பற்றிய நூற்களிலன்றோ அது புலப்படும் எனவே வருணாச்ரம விதிவிலக்குகளைக் கூறவெழுந்த ஸ்மிருதிகளிலும் அதற்கனுகுணமானமற்றைய நூற்களிலுமே விதவைகளின் மறுமணத்தைப் பற்றிப் பார்க்கவேண்டுமேயல்லாது மோக்ஷமார்க்கத்தைப் பற்றி தர்மோபதேசம் செய்த கீதாசாஸ்திரத்தைப் பார்த்து அதில் பால்ய விதவைகளுக்கு இடமில்லையெனக் கூறுவதில் யாது பயன்? அதுகொண்டே கீதையின் கண்ணும்,

तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्य व्यवस्थितौ ।
ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌤𑍇 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 ।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌾𑌨𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌿𑌹𑌾𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

வசனங்களால் இது செய்யத் தகுந்தது இது செய்யத் தகாதது எனத் தீர்மானிப்பதில் சாஸ்திரங்களே உனக்குற்ற பிரமாணங்கள் அவ்விதமறிந்தே சாஸ்திரங்களில் விதித்துள்ள கருமங்களையே நீ பின்பற்றக் கடவாய் என்று கருணாநிதியான ஸ்ரீ கிருஷ்ணனும் தெளிவற உணர்த்தியிருப்பது. இதுவுமன்றி,

यश्शास्त्रविधिमुत्सृज्य वर्तते कामकारतः ।
न ससिद्धिमवाप्नोति न सुखं न पराङ्गतिम् ॥

𑌯𑌶𑍍𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌿𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌕𑌾𑌮𑌕𑌾𑌰𑌤𑌃 ।
𑌨 𑌸𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨 𑌸𑍁𑌖𑌂 𑌨 𑌪𑌰𑌾𑌙𑍍𑌗𑌤𑌿𑌮𑍍 ॥

எவனொருவன் வேதங்களிலும் அதைப் பின்பற்றும் ஸ்மிருதி முதலிய மதநூற்களிலும் விதிக்கப்பெற்ற கருமத்தை விட்டு தன் மனம் தோன்றியவாறு செய்கின்றானோ அவன் இம்மையிலும் மறுமையிலும் சுகம் பெறாது ஒழிகின்றான் என்று நமது கீதாசாஸ்திரம் தர்மஸ்வரூபத்தையும் அதன் விதிவிலக்குகளையும ஓரிடத்தில் நன்கு புகட்டி, ஸ்திரீ தருமம் கூறும்.

மற்றுமோரிடத்தில்

धर्मे नष्टे कुलं कृत्स्नमधर्मोऽभिभवत्युत ।
अधर्माभिभवात् कृष्ण जायते वर्णसंकरः ।
स्त्रीषुदुष्टासु वार्ष्णेय जायते वर्णसंकरः ।
संकरो नरकायैव कुलघ्नानां कुलस्य च ॥

𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨𑌷𑍍𑌟𑍇 𑌕𑍁𑌲𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑍋𑌽𑌭𑌿𑌭𑌵𑌤𑍍𑌯𑍁𑌤 ।
𑌅𑌧𑌰𑍍𑌮𑌾𑌭𑌿𑌭𑌵𑌾𑌤𑍍 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌕𑌰𑌃 ॥
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌸𑍁 𑌵𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍇𑌯 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌕𑌰𑌃 ।
𑌸𑌂𑌕𑌰𑍋 𑌨𑌰𑌕𑌾𑌯𑍈𑌵 𑌕𑍁𑌲𑌘𑍍𑌨𑌾𑌨𑌾𑌂 𑌕𑍁𑌲𑌸𑍍𑌯 𑌚 ॥

என்பதாதி சுலோகங்களால் "அறநெறிபிரண்டு அதர்மம்மேலிடுமேல் குலஸ்திரீகள் தீயகருமங்களிற் பிரவர்த்தித்து குலத்திற்கு அவமானத்தை உண்டுபண்ணுகிறார்கள். அவர்களின்தோஷமுள்ள நடத்தையால் வருணநிலை சீர்குலைந்து, கொடிய நரகத்திற்கிடமான வருணஸாங்கர்யமும் ஏற்படுகின்றது" என்றும் அக்கீதாசாஸ்திரமே நன்கு வெளியிட்டிருககின்றது. இவ்விரண்டு வசனங்களையும் சமாசப்படுத்திப் பார்க்குங்கால் சுருதி ஸ்மிருதி புராணாதிகள் சாற்றிருக்கும் ஸ்திரீ தருமம் சீர் குலைந்தால் முற்கூறிய கெடுதல்களேற்படுமென நன்கு விளங்கும். காந்தியடிகள் கூறும் வண்ணமே பால்ய விதவைகளுக்கு பகவத்கீதையிலாவது வேதத்திலாவது இடமில்லையென்றே வைத்துக்கொண்டாலும் அவர் தாம் கொண்ட அபிப்பிராயத்திற்குப் பொருத்தமாகவும் அவ்விரண்டு நூற்களில் வசனங்களிருப்பதாகத் தெரியவரவில்லை ஆகவே ஒன்றுக்கொன்று எதிரிடையாகவுள்ள இவ்விருகொள்கைகளுக்கும் கீதாசாஸ்திரமாவது வேதங்களாவது இடந்தரவில்லையெனில் அவற்றை யாதாரமாக வைத்துக்கொண்டு சாஸ்திர சம்மதமான

விதவைகளின் மறுமணம் கூடாதென்பதைக் கண்டிக்க முன் வருவதும் எவ்விதம் பயன்படும் ?

ஐய, முன் செய்த கர்மபலத்தின் பயனாக நிகழ்வதும், பிரும்மசரிய விரதானுட்டானத்தைத் தவிர்த்து மறுவிவாஹம் முதலிய மற்றைய வுபாயங்களால் பரிகரிக்க முடியாததுமான இப்பால்ய வைதவ்யமெனும் விஷயத்தில் அனுதாபப்படாதார் ஒருவரும் இல்லையெனத் துணிந்து கூறலாம். எனினும் இத்தகைய கொடிய துக்கத்தைப் பெற்ற தகப்பன்மார்களும் சகித்திருப்பது இம்மறுமணத்தை அறியாததனால் அன்று. மற்றேதெனில் முற்பிறவியில் செய்த தீயகருமத்தின் பலனை இப்பிறவியில் அனுபவித்தே தீரவேண்டுமெனக் கூறிநிற்கும் நமது சாஸ்திரங்களின் சித்தாந்தத்தை அனுசரித்தேயாம். என்னெனில் கர்மபலத்தின் பலனாக நிகழும் வைதவ்ய துக்கம் மறுமணத்தினால் ஒழிந்து விடுமோ? இரண்டாவது தாம் மணம்செய்வித்த புருஷன் தீர்க்காயுள் பெற்றவனென ஓர்வித நிச்சயமானது இருப்பின் ஒருவேளை அம்மறுமணத்திற்குச் சம்மதிப்போமென்றாலும் அக்காலன் வரும் காலமும் எமது காந்தியடிகளென்று மற்ற எவராலும் கூறுவதற்கியலாத விஷயமாகவன்றே இருக்கின்றது ! எனவே, விதவைகள் செய்துகொள்ளும் மறுமணத்திற்குப் பிறகாவது அவர்கள் அப்புருஷர்களுடன் நீடூழிகாலம் சுகித்திருப்பார்களென்ற நிச்சயமில்லாதவரையில் காந்தியவர்கள் இம்மறுவிவாகத்தின் பயனாக எதிர்பார்க்கும் நன்மைகள் சொல்மாத்திரத்திலிருக்குமேயன்றி அனுபவத்தில் ஏற்படாதென்பது திண்ணம்.

ஆனால் இககொடிய வைதவ்ய துக்கத்தை யொழிப்பதற்குற்ற உபாயங்கள் இன்னதென்பதைக் கூறுவோம். தற்காலத்தில் மிகவும் மேலிட்டு நிற்கும் அதிபால்ய மரணமும் (Early Meratatily) என்று இது ஆங்கிலத்தில விவகரிக்கப் பெறும பணமெனும் பேய்க்கிடுபட்டு வயது சென்ற கிழவர்களுக்கு பெண்மணிகளான நமது கண்மணிகளை விவாகம செய்து கொடுக்கும் கொடுமையுமே இப்பால்ய வைதவ்யமெனும் துக்கத்திற்கு உற்ற காரணங்கள். எனவே இவ்விரண்டும் ஒழிந்தாலன்றி மறுவிவாகத்தினால் இத்துக்கம் நிவர்த்திக்கக் கூடியதன்று. இவ்விரண்டினுள் முதன்மையாகச் சொல்லத்தகுந்த பால்ய மரணத்தையொழிக்கும் உபாயமும், நமது சாஸ்திரங்களிற் புகட்டியுள்ளபடி, நம்

தேயமாந்தர் பிரமசரியமெனும் ஆசிரமத்தை அணுவளவும் வழுவாது பின்பற்றுதலும், பிராணயாம ஆகார நியமாதிகளான விதிகளைச் செவ்வனயனுட்டித்ததுமேயாம். இவ்விதமே ஸனாதன நெறிவழுவாது விதி விலக்குகளைப் பின் பற்றியதாற்றான் நமது முன்னோர்கள் அரோகதிருடகாத்திரர்களாக நீடூழிகாலம் இல்லறத்தை இன்புற நடத்தி வந்தனர். நமது பெண்மணிகளும் வைதவ்ய துக்கமென்பதே அறியாது கற்பரசிகளாய் விளங்கினர். இக்கருத்தையே, ஆதிகாவ்யமெனப் போற்றப்படும் ஸ்ரீமத்ராமாயணத்தில்,

नार्यश्चाविधवा नित्यं भविष्यन्ति पतिव्रताः ।

நாய்ஶ்சாவிதவா நித்யம் ஹவிஷ்யந்தி வதிவ்ரதாஃ ।

என ராமராஜ்யத்தின் சீருஞ் சிறப்பையும் வர்ணிக்குமிடத்து அந்நாட்டுப் பெண்மணிகள் வைதவ்ய துக்கமென்பதே அறியாத கற்பரசிகளாக விளங்குவர் என்றிவ்விதம் முனிபுங்கவரான ஸ்ரீ வான்மீகி மிகப்பெருமையாகக் கூறியது. எமது காந்தியடிகளும முற்கூறிய இவ்விரண்டு துறைகளிலும் பிரசாரம் செய்யவேண்டுமே அல்லாது தற்காலம் அன்னார் செய்துவரும் விதவைகளின் புனர் விவாகப் பிரசாரமானது பயன்படக் கூடியதுமன்று. அதனால் பால்ய விதவைகளின் துக்கம் ஒழியவும் ஒழியாது. ஆனால் இப்பொழுதுள்ள பால்ய விதவைகள அனுபவிக்கும் துக்கம ஒரு பங்கும், இவர் செய்யும் மறுமணத்தின் பலனாகவேற்படும் துககம் இரண்டு பங்குமாக ஆய்விடும். ஏனெனில் நமது இந்திய நாட்டில் பெண்மக்களுக்கு ஓர் தாம் விவாகம் செய்வதற்கே தக்கவரன் கிடைக்காமல் மிகக சிரமமாகவிருக்க விதவைகளுக்கு மறுமணம் செய்வதென ஆரம்பித்தால் நமது நாட்டிலுள்ள ஏனைய பால்ய விதவைகளுக்கும் வரன்கள் எங்கிருந்து தேடுவது? அதற்குப் புதிதாகவன்றோ புருஷசிருஷ்டி ஏற்படவேண்டும்.

ஐய! இதுகாறும் நமது புண்ணிய பூமியின் கன்னிகைகளின் விவாகத்திற்கு வழியின்றி கன்னிமடம் கட்டியுள்ளதாக நாம் அறிகிலோம். அத்தகைய கோலத்தையும் நாம்கண்கூடப் பார்க்கும் காலம் நெருங்கிவிட்டதுபோலும்! ஏனெனில் தற்காலத்திய நிலைமையில் இவ்விதவைகளின் மறுமணமும் செய்யப்படுமேயானால் நமது பெண்மக்கள் பலர் விவாகத்திற்கே வகையின்றி ஆயுள் வரை கன்னிகைகளாகவே காலங்கழிக்க நேரிடும். இங்ஙனம்

விவாகமின்றி மேனாடுகளில் பெண்மக்கள் பலர் தங்கள் வாழ்நாளை வீணாளாகக் கழித்து வருகின்றனரென யாம் கேள்விப்படுகிறோம் முதலில் விவாகம் செய்விக்கப்பெற்றும் விதிவசத்தால் புருஷனை யிழந்த பாலிய விதவைகளின் துக்கத்தைக் கண்டு சகிக்க மனம் பொறாத எமது காந்தியடிகள் ஓர் தரம் விவாகத்திற்கும் வகையின் றித் தத்தளிக்கும் பெண்மணிகளின் துக்கத்தை எவ்விதம் சகிப் பாரோ எமக்குத் தெரியவில்லை, சாஸ்திர சம்மதமான நமது பழையவேற்பாட்டிலுள்ளதைக் காட்டிலும் இரட்டிப்பாகவும் அதிரகசியமாகவும் அப்பொழுது நடக்கும் துர்நடத்தைகளைப் பரி காரம் செய்ய வழியின்றி எமது காந்தி தாம் செய்த வினைக்காக மறுபடியும் உண்ணாவிரதமிருக்குங்காலம் வந்துவிடுமே! அது மாத்திரமோ! நமது பரத நாட்டிற்கு இதுவரையில்லாததும் விவாகமென்பது சிற்றின்ப போகத்திற்கே யெனக்கருதும் அயல் நாடுகளுக்கே ஏற்றதுமான விவாகரத்து வழக்குகளும் அதற்கு ற்ற நியாயஸ்தலங்களும் (Divorice Courts and Divorcesuits) இம்மறுமணத்திட்டத்தினாலேற்படுமென்பதிற் சந்தேகமில்லை. இக்காரணங்களால் காந்தியடிகள் செய்துவரும் விதவைகளின் புனர் விவாகப் பிரசாரமானது சாஸ்திர ஸம்மதமன்று யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒவ்வாதது, நமது புண்ணிய பூமியாகியபாரத நாட்டிற்கேற்றதுமன்று, அவர்மாணவர்கட்கு அதுபற்றி வற் புறுத்தும் உபதேசங்களும் சனாதன தர்மத்தை வழுவாதுபின்பற் றிய நமதுமுன்னோர்களின் பாம்பரையிலுதித்தமாணவர்கள்விஷய த்திலும் பயன்படாதொழியுமென்பது திண்ணம், ஆகவே விதவை களின் மறுமணத்தைப்பற்றிய இப்பிரசாரத்தை நீக்கி உண்மை யில் வைதவ்ய துக்கத்தை நிவர்த்திக்கக் கூடியதும், சாஸ்திரஸம் மதமானதுமான பிரம்மசர்ய விரதானுட்டானம் ஆகாராதி நியமங் கள் வரதக்ஷிணையை யொழிப்பதுபோன்ற விஷயங்களில் பிரசா ரஞ்செய்து விதவைகளின் கஷ்டத்தை நிவர்த்திக்கும்படிக்கும் நமது புராதனமான இந்துமதத்தைப்பரிபாலிக்கும்படிக்கும் யாம் காந்தியடிகளைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளவதுடன் அது வே தேச நன்மையின் பொருட்டுஉண்மையாகப் பாடுபட்டதாகு மெனவும் தெருவித்துக் கொள்கின்றோம்.

அவ்விதமின்றி ஐக்கியஜன சமூகச் சீர்திருத்தமென்ற வியாஜங்கொண்டு உலக நன்மைக்கென உழைக்கும்ஸத்தியாக்ரகி

களான மகான்கள் புராதனமானதும் ஒப்புயர்வற்றதுமான ஹிந்து மதத்தில் கையை வைப்பது நன்றன்று நன்றன்று. இத்தகைய மதப்பிரிவின் காரணமாகவே முற்காலம் இவ்விந்திய நாட்டிலும் மற்றுமுள்ள மேனாடுகளிலும் பெருத்த தகைச்சல்களும் போர்களும் நடந்துள்ளனவென்பது ஆதிமுதல் தேச சரித்திரங்களை ஆராய்ச்சி செய்யுமிடத்துத் தெற்றெனப்புலப்படும். ஐரோப்பாவில் அரசாங்கத்திற்கும் மடாதிபதிகளுக்கும் நடந்த யுத்த பரம்பரைகள் (Wars between the Empire anb the Papacy) இதுகாரணமாக நிகழ்ந்தனவேயாம் கடைசியில் சமாதானமேற்படும் காலத்திலும் மதவிஷயங்களில் 'போப்' (Pope of Rome) என்றும் மதாசாரியரே அதிபதியென்றும் மற்றையாஜாங்க விஷயங்களில் ரோமிய சக்கிரவர்த்தியின் (Roman Emperor) அதிகாரமே எற்றுக்கொள்ளத்தக்கதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது அன்றியும் அதற்குசிறிதுகாலத்திற்குள்ளேயேநடந்த 'க்ரூஸேட்' (Crusades) என்று சொல்லப்படும் படையெழுச்சிகளும் சண்டைகளும் ஓர்புறமிருக்க நவீனதேசசரித்திரம் ஆரம்பமானதாகச் சரித்திராசிரியர்களால் கருதப்படும் பதினைந்தாவது நூற்றாண்டினிறுதியிலிருந்தும் நடைபெற்ற பற்பல யுத்தங்களும் இம்மதப் பிளவினாலேயே நிகழ்ந்தனவெனத் தெறியவருகின்றது இவ்விதமே, நமது நாட்டிலும் இந்து மகமதிய மதங்களுக்கு அடிக்கடி யேற்பட்ட முறணின் காரணமாகப் பற்பல இன்னல்கள் விளைந்திருக்கின்றன. இங்ஙனமிருக்க அகில இந்து முகமதிய ஒற்றுமையை நாடியுழைக்கும் இத் தருணத்தில் காந்தியடிகள் போன்ற முறட்டு ராஜீயவாதிகள் இந்துமதத்தை வேறுடன் அழிக்கக்கூடிய விதவாவிவாகம்போன்ற பிரசாரங்களில் தலையிடுவது தீர்க்கதரிசிகளான நமது பிராசீன முனிவர்கள் பொதுநலத்தைக் கருதி எழுதிவைத்த மதநூற்களுக்கும், அதற்கிணங்கவே, மதவிஷயத்தில் தலையிடுவதில்லையென மாட்சிமைதங்கிய விக்டோரியா சக்கிரவர்த்தினியால் பட்டாபிஷேக காலத்தில் இந்துமக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உறுதிமொழிகளுக்கும் முற்றிலும் விரோதமாயிருப்பதுமன்றி ஒவ்வொரு ஸநாதந இந்துவின் மனத்தையும் அது புண்படுத்திவிடுமென்பது நிச்சயம்.

ஐயன்மீர்! பல்லாயிரம் ஆண்டுகளாகப் பற்பல படையெழுச்சிகளையும், மற்றும் பற்பல இன்னல்களையுந் தாண்டி தற்காலமும்

பிரகாசித்துக்கொண்டுவரும் நமது ஸநாதந ஹிந்துதர்மமும் வருண வியவஸ்தையும் கலியின் கொடுமையால் சிறிது மங்குமேயல்லாது இனி அதற்கு நேரிடும் சிறிய உபத்திரவங்களால் அது அடியுடன் நசிக்கக்கூடியதன்று எனினும், நமது ஆரியாசாரங்கள் பலவும் நிலைகுலைந்து தலைதளர்ந்து தடுமாறிநிற்கும் இக்காலத்திலும் ஸீதாதேவி, சாவித்ரீ, அருந்ததிதேவி முதலிய கற்பரசிகளின் குலத்துதித்த நமது பெண்மக்களாலேயே அவ்வாசாரம் பரிபாலிக்கப்பெற்றுவர, அஃதையும் சீர்குலைக்கக்கூடிய விதவா விவாஹம் முதலிய பிரசாரங்களில் காந்தியடிகள்போன்ற பெரியோர்களும் தலையிடும்படி தூண்டுவது அப்பரமனின் திருவிளையாடலோ மற்றும் யாதோ யாம் அறிகிலோம். எது எவ்வாறாயினும்,

यदा यदाहि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानं अधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

யதா யதாஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத ।
அப்யுத்தாநம் அதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥

("தர்மம் சிதையுறுங்கால் யான் உலகின்கண் தோன்றுவேன்") என்று கூறி அதன்பின்னரும்,

परित्राणाय साधूनां विनाशाय चदुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம் ।
தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥

("நல்வினையகற்றும் ஆன்மாக்களைக் காத்தருளுவதற்கும் தீயாரைச் சங்கரிப்பதற்கும் இவ்விதம் தருமத்தை உலகில் நன்கு நிலைநிறுத்துவதற்கும் யான் ஒவ்வோர் யுகத்திலும் அவனியிலவதரிப்பேன்") என்று திருவாய் மலர்ந்தருளிய தனது உறுதிமொழிகள் பழுதுபடாவண்ணம் இராமகிருஷ்ணாதியவதாரங்களிலும் அதிலும் முக்கியமாக வாமனாவதார அவஸரத்தில் ஈரேழு உலகங்களையும் தனது இரு திருவடிகளாலளந்து எஞ்சிய மூன்றாவது அடிக்கு மன்னர் மன்னனும், பாகவதோத்தமனும், பரம ஸத்தியாகிரக சிரோமணியுமான மஹாபலிசக்கிரவர்த்தியின் சிரசில் தூக்கிவைத்து தர்மஸம்ரக்ஷணம் செய்தருளிய திவ்யகாந்திபொருந்திய

அப்பரமாத்மாவின் திருவடிகளுள்ளளவும் எமது மகாத்மா காந்தியடிகள் இந்து ஸனாதன தர்மத்திற்கு முற்றிலும் விரோதமாகத் தற்காலம் செய்துவரும் பால்யவிதவா விவாகப் பிரசாரங்களும் பெரு முயற்சிகளும் ஒருசிறிதும் பயன்படாதொழியுமென அன்னார்க்கு வணக்கமாய்த் தெரிவித்துக்கொள்ளுவதுடன் நமது புராதன பண்டிதமணிகளும் இச்சமயம் இறகேந்தி நமது ஆரியன் வாயிலாகவும் பிரசங்கமேடைகளிலும் தக்கப் பிரசாரஞ்செய்து அநாதிகாலந்தொடங்கி நிலைபெற்றுவரும் வேதமார்க்கமான ஸனாதனதர்மத்தை நிலைநிறுத்துமாறுமிகவும் பரிவுடன்பிரார்த்திக்கின்றோம். புராதன வேதமார்க்கம் செழிக்க! இந்து ஸனாதன தர்மம் தழைக்க!!

ப. வ. கணபதி சாஸ்திரி.

---

## மதிப்புரை.

### "கோஸம்ரக்ஷண சாஸ்திரம்"

புளிவலம் மகா-௱-ஸ்ரீ R. கோபாலய்யரால் இயற்றபட்ட இப்பெயர் வாய்ந்த ஒரு புஸ்தகத்தை ஷடியாரால் அனுப்பப்பட்டு வரப்பெற்றோம்.

கோவென்பது மிருகஜாதிகளில் ஒன்றாயிருந்தாலும் அது மிகவும் பரிசுத்தமானதென்றும் ஸகலதேவதைகளும் அதில் வசிக்கிறார்களென்றும் அதிலிருந்தும் உண்டாகும் ஒவ்வொரு வஸ்துவும் வைதிக லௌகிக கார்யங்களுக்கு மிகவுமுபயோகமுள்ளதென்றும் அதை எல்லோரும் பூஜிக்கவேண்டுமென்றும் நம் சாஸ்திரங்களில் பலவிடங்களில் ஸ்பஷ்டமாய் கூறப்பட்டிருக்கின்றது. உலக நன்மையும் பொருட்டேற்பட்டிருக்கும் பலவகைகளில் இதையே முக்கியமாகக் கூறலாம். இக்கருத்தைக் கொண்டுதான் சில பெரியோர்கள் உலகக்ஷேமத்தைப் பிராத்திக்குங்கால்

गोब्राह्मणेभ्यश्शुभमस्तुनित्यं (கோப்ராஹ்மணேப்யஸ்ஸுபமஸ்து நித்யம்)

என்று கோவின் க்ஷேமத்தை முந்திப் பிரார்த்தித்திருக்கிறார்கள். இவ்வளவு உத்தமமான மிருகமாயிருப்பதால்தான் வஸிஷ்ட மகரிஷி ஆதரவுடன் இதைப் பரிபாலித்துவந்தார். பக்தசிகாமணியாகிய சண்டிகேஸ்வர நாயனாரும் இதை நன்கு பாதுகார்த்ததினால் சிவசாயுஜ்ய பதவியைப் பெற்றார். கமலேச குலதிலகனான

திலீபனென்றும் பூபாலன் தன் குருவின் ஆக்ஞையால் கோவை தானே நேரில் ஆராதித்து அதின் அனுக்கிரஹத்தால் மிகவும் கீர்த்தி வாய்ந்த ரகு வென்கிற புதல்வனை அடைந்தார். வேதத்தில் முக்கியமாகக் கூறப்பட்டவேள்வி என்றும் சிறந்த கர்மாவிற்கும் ஈசுவராபிஷேகத்திற்கும் மனுஷன்முதல் ஸகலமான அசுத்த பதார்த்தங்கள் சுத்தியாவதற்கும் இதின் பால், தையிர், நெய், கோமயம், மூத்திரம் முதலான வஸ்துக்களே சிறந்ததான ஸாதனமாக விளங்குகின்றன. தர்மஸ்தாபனார்த்தம் அவதரித்த ஸ்ரீ கண்ணபிரான் உத்தமமான ராஜ வம்சங்கள் எவ்வளவோயிருக்க அவைகளைவிட்டு கோஸம்ரக்ஷணஞ் செய்யவேண்டுமென்கிற எண்ணங்கொண்டே யாதவ வம்சத்தில் தோன்றி கோக்களைப் பாதுகார்த்து வந்தார். இவைகளைக் காட்டிலும் கோவிற்கு மஹிமையுண்டென்கிற விஷயத்தில் வேறு எவ்வித ஆதாரத்தை நாம் கவனிக்கவேண்டும். இவ்வித மஹிமை வாய்ந்த கோவை எல்லா ஜனங்களும் நன்கு ஆராதித்துச் சிறந்த பயனைப் பெறவேண்டுமெனக் கருதி ஷை கோபலய்யரவர்கள் சுமார் 160-பக்கங்கள் கொண்ட ஒரு நூலை இயற்றி தமிழில் அச்சிட்டிருக்கிறார்கள். அந்த நூலை ஆறு அத்தியாயங்களாகப் பிரித்து முதல் அத்தியாத்தில் பசுக்கள் உண்டான விதம், அவற்றின் பெருமை, அவைகளின் பிரிவுகள் வாங்கவேண்டிய நாட்கள், அவைகளின் உபயோகம் முதலியவைகளும் 2-வது அத்தியாத்தில் பசுக்களைப் பூஜிப்பதால் உண்டாகும் பயனும். தானத்தாலேற்படும் பலன் முதலானவைகளும். 3. வது அத்தியாயத்தில் பசுக்களை ஆராதிக்கவேண்டிய முறைகளும் அவைகளைக் கட்டுவதற்கு வேண்டிய கட்டிடங்களின் முறையும் சினையாயிருக்கும் காலத்தில் ரக்ஷிக்கவேண்டிய ரீதியும் மற்றும் பல விஷயங்களையும், 4-வது அத்தியாயத்தில் பசுக்களின் லக்ஷணம், குணம், நிறம், பால், தயிர், வெண்ணை இவைகளின் பேதங்களும் குணங்களும் பின்னும் பல விஷயங்களும் 5-வது அத்தியாயத்தில் ஸகல நோய்களின் பேதமும் அவைகளுக்குற்ற மருந்தும் நாட்டு வைத்திய முறைப்படி விஸ்தாரமாகவும். 6-வது அத்தியாயத்தில் இங்கிலீஷ் முறைப்படி செய்யவேண்டிய மருந்துகளும் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இந்த புஸ்தகம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவசியம் வேண்டுமென்று நாம் சொல்லாமலே விளங்கும்.

இதின் கிரயம் ரூ. 1—0—0

R. கோபலய்யர், ஸ்ரீ திருநாகைவல்லி அம்பாள் விலாஸ்.
புலிவலம் (விஜயபுரம் போஸ்ட்) தஞ்சாவூர்ஜில்லா.

# ஸநாதன தர்மம் அவசியம்.

இப்புண்ய பூமியாகியஹிந்துதேசத்தில்ஜனித்தநாம்எல்லோரும் மானிடப் பிறவிகளே: இப்பிறவி எவ்விதம் நமக்குக் கிடைத்தன. இதன் முக்கிய நோக்கம் என்ன? நானாவித யோனிகளில் பிறப்பதும் இறப்பதும் தானா இதன் செயல். அப்படியானால் எவ்வளவு காலம் வரை இவ்விதம் நாம் அனுபவித்து வருகிறது. இவ்விதம் அனுபவித்து வருவதில் உத்தம சுகங்களே நாம் எதிர்பார்க்கும்படி கிடைக்கின்றனவா. மேலும் இச்சரீரம் கிடைப்பதற்கு முன் ஜன்மாவில் எவ்விதம் இருந்தோம். இனி இச்சரீரம் முடிந்த் பிறகு எதை அனுபவிக்கப் போகிறோம் என்பவைகளைப்பற்றிய ஆராய்ச்சிகளை இகபரக்ஷேமத்தைவிரும்பும்ஆஸ்திகன் எவனும் செய்ய வேண்டுவது முக்யமாகும்.

2. இது சிலருக்கு அருவருப்பாயும் ஆத்திரமாயும் இருக்கலாம். ஆனால் எந்த மனிதனும் பகுத்தறிவுடையோனாயிருந்தால் இவ்வித ஆராய்ச்சியில் விருப்பற்றவனானால் தன் ஜன்மாவை நஷ்டம் செய்து கொள்வதாகவே முடிகிறது. இதை நாம் ஆராய்வதென முன்வந்தால் நமக்குள் ஓர்வித சாந்தமும் இறக்கமும் ஏற்படும். இவ்விதம் நமக்கு ஏற்படுவதனால் பிறரிடத்துள்ள த்வேஷம் விலகி எல்லோரிடத்திலும் ஸம அன்பு அஹிம்ஸை இவைகள் கண்டிப்பாய் நமக்கு உண்டாகும்.

3. இதிலிருந்து நாம் புராதனப் பெரியோர்களின் செய்கையும் சரித்திரமும் அனாதிகாலம் தொட்டு நாளது வரையில ஜனங்களுக்கு தர்மாதர்மங்களைப் பற்றி போதித்துவரும் ராமாயணம் பாரதம் பாகவதம் முதலான புராணங்களிலும் புனிதமான வேதசாஸ்திரங்களினிடத்தும் பூர்ண நம்பிக்கையேற்படும் ஆனால் தற்காலம் சிலருக்கு வேதாசாஸ்திரத்தில் வெறுப்பிருக்கிறது. இந்து மதத்தின் ஒவ்வொரு கிரந்தங்களிலும் எவனும் ஒருமுறை கவனித்துணர்ந்தால் அவனுக்கு நம்பிக்கையும் தர்மாதர்ம உணர்ச்சியும் உண்டாகாமலிராது.

4. இப்பொழுது நாம்நம்ஸந்ததிகளானகுழந்தைகள்நமக்குப் பிறகு க்ஷேமத்தை அடையவேண்டிய வழிகளில் எவ்வளவுகவலையுடனும் ஊக்கத்துடனும் ஒவ்வொரு கார்யங்களையும் செய்து வைக்கிறோமோ அதேபோல் நம் வம்சத்துப்பூர்வீகப்பெரியோர்

கள் முக்காலத்தையும் உணர்ந்த மஹான்களான மனு யாக்ஞவல்கியர் முதலிய ரிஷிகள் மிகக் கருணைகொண்டு நாம் இஹபர க்ஷேமத்தை யடையவேண்டிய வழிகளை மிக சுலபமாகவும் சிரமம் அற்றதாயும் உள்ள வழிகளை நமக்குப் புராணமூலமாயும் ஸ்மிருதி முதலான சாஸ்திர மூலமாயும இதைச்செய் இதைச் செய்யாதே என்றும் ஒவ்வொரு ஆஸ்திகனும் பிறப்புமுதல் இறப்பு வரையில் அவன் வாழ்நாளில் அநுஷ்டிக்கவேண்டிய கார்யங்கள் ஒவ்வொன்றையும் ஸ்பஷ்டமாக விளககிக் காட்டியுள்ளார். அதிலும கால தோஷங்களை நன்கு குறிப்பிட்டு இக்கலியுகத்தில் செய்யவேண்டிய காரியங்களில் மிகஊக்கங்கொண்டும்மிக்க அநுதாபத்தோடும் இன்னவிதமாய்த்தானிருக்கவேண்டும் எனற கண்டிப்பான பல விதிகளையும் யுக்தியாய் தோன்றும் பல ஆசங்கைகளுக்குத் தக்க பதிலும் எழுதி உரைத்திருக்கிறார்கள்.

5. இக்காலத்திலோ அவர்களின் வம்சத்திலுதித்த நாம் இதுகள் ஒன்றையும் அநுஷ்டிக்காததோடு பலர் வேதசாஸ்திரங்களையும் மனுஸ்மிருதிகளையும் கண்டபடி நிந்தித்துவருகிறார்கள் அதனால் நம் பூர்வீக மத உணர்சசியை இழந்தவராகவும் நாஸ்திகறாகவும் ஆவதைத் தவிர ஜாதிச் சண்டைகளும் தீயச்செயலுமே வளர்ந்து வருகிறது. தற்காலம் எங்கு பார்த்தாலும் பிராமண அப்பிராமணச் சண்டை வலுககிறது. ஜனங்களுககுச் சாஸ்திர ஆராய்ச்சியும் மத உணர்ச்சியும குறைகிறது. அந்தோ இககலியின் கொடுமையோ

6, இவ்விதம் இவ்விந்துதேசத்திற்கு நேர்ந்திருக்கும்குறைகளை நிவர்த்திக்க வர்ணாசிரம தர்மங்களைபபல பண்டிதர்களும் பல தேசீய பத்ரிகைகளும் பல தனவான்களும் முன்வந்து ஆழ்ந்து கிடக்கும் பல ஜனங்களின் மனதில் உள்ள நாஸ்திகத்தன்மையை நீக்கி புனிதமான தர்ம அதர்ம உணர்ச்சியை எழுப்பி இகபரசுகத்தை அடையவேண்டிய வழிகளையும் ஸாவஜன ஸமூஹ ஒற்றுமையும் உலகில் நிலைநாட்ட வேண்டுகிறேன்,

P. M. கிருஷ்ணஸாமி அய்யர்,

சிறுங்குடிப்புலியூர்.